மேலும், ஆம்பூர், திருப்பத்தூர், பேரணாம்பட்டு, தாரப்படவீடு ஆகிய இடங்களில் கொசுத் தொல்லை பரவியிருப்பதால் இந்நோயை கட்டுப்படுத்த கொசுத் தடுப்பு நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட நகராட்சியினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளர்கள் பதவிகள்.

*வினா எண் 99—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் அனைத்துத் துறைக்கும் விரிவுரையாளர்கள் உள்ளார்களா?

(ஆ) சில துறைகளுக்கு இல்லையெனில் உடன் பூர்த்தி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) உள்ளனர்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

இராணுவப் பணியிலிருந்து திரும்பும் மருத்துவர்கள்.

*வினா எண் 100—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராணுவத்தில பணியாற்றி விட்டு திரும்பிய டாக்டர்களை வேலையில் அமர்த்துவதில் அரசு முன்னுரிமை கொடுக்கிறதா?

(ஆ) அவர்களுக்குக் கொடுக்கப்படும் மற்ற சலுகைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) (1) ஐந்து வருடம் இராணுவத்தில் சேவை செய்துவிட்டு திரும்பும் மருத்துவப் பட்டதாரிகளுக்கு தற்காலிக உதவி அறுவை மருத்துவர் நியமனத்தில் முன்னுரிமை தரப்படுகிறது.

(2) ஆண்டுதோறும் ஏற்படும் உதவி அறுவை மருத்துவர்களின் நிரந்தரப் பணியிடங்களில் ஐந்து சதவீதம் இராணுவத்தில் பணிபுரிந்து திரும்பியவர்களுக்கும் ஒதுக்கப்படுகிறது; இதன் மூலம் இவர்கள் தேர்வு ஆணைக் குழுவால் முறையான உதவி அறுவை மருத்துவர்களாக நியமிக்கப்பட தேர்ந்தெடுக்கப்படுவதில் சலுகை காட்டப்படுகிறது.

1979 பிப்ரவரி 19]

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, இராணுவத்திலிருந்து திரும்பிய மருத்துவர்களுக்கு உதவி அளிப்பதைப் போலவே வெளிநாடுகளுக்குச் சென்று பட்டம்பெற்று அல்லது அங்கே பல ஆண்டுகள் பணியாற்றிவிட்டுத் தாயகம் திரும்புகின்ற மருத்துவர்களுக்கும் அதுபோன்ற சலுகைகள் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

கல்லூரி ஆசிரியர்களது மறியல் குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார், அரசு கல்லூரி ஆசிரியர்கள் இன்றையதினம் மறியலில் ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது அது சம்பந்தமாக நான் அவசரமாக விவாதிக்க வேண்டுமென்று தங்களிடம் அவசரத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதைத் தாங்கள் அவசரம் என்று கருதுகிறீர்களா என்று தெரியவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக விதி 42-ன் கீழ் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கூறிய அந்தப் பிரச்னையை ஒட்டியதா அல்லது வேறு பிரச்னையா?

திரு. ஜே. ஜேம்ஸ்: கல்லூரி ஆசிரியர்கள் இன்றுமுதல் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஆகவே, அதுசம்பந்தமாக......

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இதே விஷயம் குறித்து நானும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றியிருக்கிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலாக ஒத்தி வைப்புத் தீர்மானமாகக் கொடுத்தால் உதவியாக இருக்குமென்ற கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.